
ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA
மலர்-1, இதழ்-1, சனவரி 2018

தமிழ், மலையாளம் – இருமொழி அகராதி உருவாக்கம் சிக்கல்களும் தீர்வுகளும்

ப. ஜெயகிருஷ்ணன்,

தமிழ்ப்பேராசிரியர், கேரளப் பல்கலைக்கழகம்,
திருவனந்தபுரம் - 695034, கேரளா, இந்தியா



முன்னுரை

கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு தனித்தனி மொழிகளாகப் பிரிந்த தமிழும், மலையாளமும் திராவிட மொழிகளில் நெருங்கிய தொடர்புடையவையாகும். பிறமொழிகளை விடத் தமிழ், மலையாள இருமொழி அகராதி உருவாக்குவதென்பது மிகவும் எளிதான ஒன்றாகும். இருமொழிகளிலும் ஒலி வாக்கியப்பொருள் அமைப்பில் பொதுவாக அமைந்த எண்ணற்ற சொல் வாக்கியங்கள் உள்ளன. பெரும்பாலான சொற்கள் சிறிய ஒலி வேறுபாட்டுடன் அமைந்துள்ளன. நுண்ணிய பொருள் வேறுபாடுகள் உள்ளன. இத்தன்மைகளை ஆய்ந்து தமிழ், மலையாள அகராதி உருவாக்க வேண்டுமென்ற நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

ஒலி வேறுபடும் சொற்கள்

(எ.டு)	தமிழ்	மலையாளம்
	கட்டு	கெட்டு
	KATTU	KETTU
	வளர்ச்சி	வளர்ச்ச
	VALARCCI	VALARCCA

பொருள் வேறுபடும் சொற்கள்

இருமொழிகளிலும் பலசொற்கள் ஒலி, உச்சரிப்புநிலைகளில் ஒன்றுபோல் அமைந்து இருந்தாலும் பொருள் நிலையில் வேறுபட்டு அமைகின்றன.

(எ.டு) VALAM - Prosperity (Tamil)
Manure, Fertilizer (Malayalam)

நுண்ணிய பொருள் வேறுபாடு

மலையாள, தமிழ்ச்சொற்கள் நுண்ணிய பொருள்வேறுபாட்டுத் தன்மை கொண்டுள்ளதைப் பல சொற்களின் பயன்பாட்டுத் தன்மையொடு ஒப்பிட்டுக் காணமுடிகின்றது.

'எடு' எனும் சொல்

எடு (Lift) என்ற வினைச்சொல் இருமொழிகளிலும் 'தூக்கு' என்னும் பொருளில் அமையும். மலையாளத்தில் சிறிய பொருட்கள் வரை தூக்குவதற்கு (Book shelf) எடு என்ற வினைச்சொல்லைப் பயன்படுத்துவர். ஆனால் தமிழில் விரல்களினால் தூக்கப்படும் சிறிய பொருட்களுக்கு மட்டுமே இச்சொல்லைப் பயன்படுத்துவர். அகராதி படைப்போர் இதுபோன்ற நுண்ணிய பொருளை மிகக் கவனமாக எடுத்துக்காட்ட வேண்டும்.

'துண்டமாக்குக' எனும் சொல்

மலையாளத்தில் உள்ள துண்டமாக்கு (cut off, Shaver) என்ற சொல்லுக்குத் தமிழில் துண்டி, துண்டுபோடு போன்றவை இணையாக உள்ளன. மலையாளத்தில் துண்டமாக்கு என்ற சொல்லைப் பல்வேறு நிலைகளில் பயன்படுத்துவதுடன் கடுதாசைத் துண்டமாக்குக (cut the paper) என்றும் பயன்படுத்துவர். ஆனால் தமிழில் கடுதாசைத் துண்டு போடு (cut the paper in pieces) என்று பயன்படுத்துவதில்லை. மீனைத் துண்டுபோடு, பழத்தைத் துண்டுபோடு' எனத் தமிழில் கூறுவர்.

நுறுக்குகா / நறுக்குகா ஆகிய சொற்கள்

மலையாளத்தில் நுறுக்குகா/நறுக்குகா (cut into pieces) என்ற சொற்களுக்கு இணையாகத் தமிழில் 'நறுக்கு' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் உள்ளி அரிஞ்ஞால் மதி நறுக்கேண்டா (just cut the onion but not to make them into small pieces) என்ற தொடருக்கு இணையான வினையடைச் சொற்களாக சின்னதாக்கு, மெல்லிய, பொடிப்பொடியாக போன்றவை அரி, நறுக்கு என்னும் சொற்களுடன் பயன்படுத்தப்படுகின்றன.

'குத்துகா' எனும் சொல்

'குத்துகா' என்ற சொல் மலையாளத்தில் உலக்கையினால் குத்துவதையும் மில்லில் நெல் அரைப்பதையும் குறிக்கும். ஆனால் தமிழில் உலக்கையினால் குத்துவதை மட்டுமே குறிக்கும். அதாவது 'நெல்லு குத்தான் மில்லில் போயி' (He/She went to a mill to hull the Paddy) என்பதற்கு இணையான சொல் தமிழில் இல்லை. 'அரை' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

பறி / வலி / இடு ஆகிய சொற்கள்

பறிக்குக, பறி என்னும் சொற்கள் இருமொழிகளிலும் பூ, இலை, காய், பழம் போன்றவற்றைப் பறிப்பதைக் குறிக்கும். ஆனால் மலையாளத்தில் தேங்காயை வலி அல்லது இடு என்றே கூறுவர். பறி என்ற சொல் தேங்காய் பறித்தலைக் குறிக்காது. இதைத் தமிழர் அறியும் வகையில் தெளிவாக்க வேண்டும்.

அறுக்குகா /அறு ஆகிய சொற்கள்

'அறுக்குகா' என்ற மலையாளவினைக்கு இணையாக 'அறு' என்ற தமிழ்ச்சொல் பயன்படுத்தப்படுகிறது. மலையாளத்தில் இச்சொல் கடினமான பெரிய பொருட்களான வாழை இலை போன்றவற்றை அறுப்பதைக் குறிக்காது. தமிழில் அறு என்பது பலாப்பழத்தை அறு, வாழையிலையை அறு போன்றவற்றைக் குறிக்கும். 'முறி' என்ற சொல் மலையாளத்தில் இதற்கு இணையாகப் பயன்படுத்தப்படுகிறது.

முறிக்குகா (cut) என்னும் மலையாளச்சொல் முறி என்று தமிழில் வழங்கப்படுகிறது. ஆனால் மலையாளச் சொல் உணர்த்தும் முழுப் பொருளையும் தமிழ்ச்சொல் உணர்த்தாத நிலை காணப்படுகிறது. கடினமான நீண்ட பொருட்களை முறிப்பதை மட்டுமே தமிழ்ச்சொல் உணர்த்தும். ஆனால் மலையாளத்தில் பழம் முறி, மீன் முறி, முடி முறி என்றெல்லாம் வழங்கப்படுகிறது. தமிழ் பேசுவோருக்கு இது சிக்கலுள்ள பயன்பாடாக அமையும். முடிமுறி என்று தமிழ்ப் பேசுவோர் கூறுவதில்லை. இதுபோன்ற பயன்பாட்டைத் தெளிவாக விளக்கிக் கூறவேண்டும்.

நிறைவுரை

தமிழ், மலையாளம் இருமொழிகளும் ஒலி, பொருள் நிலையில் பெரும்பாலும் ஒன்றுபடுகின்றன. இருப்பினும் அவற்றுக்கிடையேயான நுண்ணிய பொருள் வேறுபாட்டை ஆய்ந்தறிந்து அகராதி அமைப்பதே சிறந்ததாகும்.